සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Islam

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 7	**இஸ்லாம்**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **சரியான விடையின் கீழ் கோடிடுக**

1. அல்லாஹ்வைத் தவிர வணக்கத்துக்குரியவன் வேறு யாருமில்லை முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார். என்பது
   (1) ஈமான் முஜ்மல் (2) ஈமான் முபஸ்ஸல்
   (3) ஈமான் காமில் (4) ஈமான் நாகிஸ்

2. உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவி தேடுகிறோம். என்பதன் அரபுப் பதம்
   (1) அல்லாஹு அஹத், அல்லாஹுஸ் சமத்
   (2) இய்யாக ந.ஃபுது, வஇய்யாக நஸ்தாஈன்
   (3) மாலிகி யவ்மித்தீன்,இய்யாக நஸ்தாஈன்
   (4) அர்ரஹ்மான் அர்ரஹீம்

3. "ஸிபத்துல்லாஹ்" என்பது
   (1) அல்லாஹ்வின் நாட்டம் (2) அல்லாஹ்வின் சக்தி
   (3) அல்லாஹ்வின் பண்புகள் (4) அல்லாஹ்வின் உள்ளமை

4. அல்லாஹ் அவர்களுக்கு ஏவியதில் ஒரு சிறிதும் மாறு செய்யமாட்டார்கள் என அல்குர்ஆன் குறிப்பிடுவது
   (1) மனிதர்களை (2) ஜின்களை
   (3) விலங்குகளை (4) மலக்குகளை

5. நாய் பன்றி என்பவற்றின் மலம், சலம், உமிழ்நீர், வியர்வை, இரத்தம் போன்றன
   (1) இலகுவான நஜீஸ் (2) கடுமையான நஜீஸ்
   (3) சாதாரண நஜீஸ் (4) நஜீஸ் அல்ல

6. உங்களில் ஒருவர் வுழூ செய்து கொள்ளும் வரையில் உங்களது தொழுகை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பது
   (1) அல்குர்ஆன் (2) அல் இஜ்மா
   (3)அல் ஹதீஸ் (4)அல்கியாஸ்

7. ஜனாபத் ஏற்பட்டவர்கள் குளிக்கும் வரை ஈடுபடுவது அவர்களுக்குத் தடை செய்யப்பட்டுள்ள விடயம்
   (1) பிரயாணம் செய்தல் (2) உணவு உண்ணுதல்
   (3) பள்ளிவாசலுக்குச் செல்லல் (4) மஸ்ஜிதினுள் தங்குதல்

Past Papers Wiki

8. மி.ஃராஜ் பயணத்தின் போது கடமையாக்கப்பட்ட இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்று
(1) தொழுகை (2) ஹஜ் (3) நோன்பு (4) ஸக்காத்

9. நோன்பு கடமையாக்கப்பட்ட ஹிஜ்ரி ஆண்டு
(1) ஹிஜ்ரி 04 (2) ஹிஜ்ரி 02 (3) ஹிஜ்ரி 01 (4)ஹிஜ்ரி 06

10. தனது இரட்சகனை ஞாபகப்படுத்தாதவன் உவமிக்கப்படுவது
(1) உயிருள்ள மனிதனுக்கு (2) தொழாத மனிதனுக்கு
(3) உயிரற்ற மனிதனுக்கு (4) குருடான மனிதனுக்கு

- **பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.**

(கஸ்தூரி வியாபாரி, பயபக்தியிலும், ஸலாம், அல்குர்ஆன், லைலதுல் கத்ர்)

11. இன்னும் நன்மையிலும்..... நீங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்து கொள்ளுங்கள்.

12. நீங்கள் அனுமதி கோரி அவ்வீடுகளில் உள்ளோருக்கு..... கூறாத வரை அவற்றில் நுழைய வேண்டாம்.

13. நல்ல நண்பனுக்கு உதாரணம்.....

14. .....எத்தகைய திரிபுகளுக்கும், மாற்றங்களுக்கும் உட்படவில்லை.

15. அல்குர்ஆன்..... எனும் இரவில் இறக்கப்பட்டது.

- **பின்வருவனவற்றில் சரியாயின் (✓)எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.**

16. எழுதுகோலைக் கொண்டு கற்பித்த அல்லாஹ் சங்கைக்குரியவன் (.....)

17. அல்குர்ஆன் கூறும் விடயங்களை சரியாகப் புரிந்து கொள்ள சுன்னா அவசியமற்றது. (.....)

18. வெட்கம் ஈமானின் ஒரு கிளையாகும் (.....)

19. மக்காவில் இருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்றவர்கள் அன்ஸார்கள் என்று அழைக்கப்பட்டனர். (.....)

20. போரின்போது பெண்களையோ, குழந்தைகளையோ, முதியவர்களையோ தாக்க அனுமதி உண்டு (.....)

(2x20=40 புள்ளிகள்)

பகுதி – II

முதலாம் வினா உட்பட மொத்தமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1. சுருக்கமான விடை தருக.
   (1) நபி (ஸல்) அவர்கள் எதிர்கொண்ட போர்கள் இரண்டு குறிப்பிடுக.
   (2) சுவன வாலிபர்களின் தலைவர்கள் என நபி (ஸல்) அவர்களால் பாராட்டப்பட்ட இரு சஹாபாக்களும் யார்?
   (3) முதன்முதலில் தொழுகைக்காக அதான் சொன்னவர் யார்?
   (4) அலி (ரலி) அவர்களுக்கும் முஆவியா (ரலி) அவர்களுக்கும் இடையில் நடந்த யுத்தம் யாது?
   (5) பாலைவனத்தில் கப்பல் கட்டியதாகக் கூறப்படும் நபி யார்?
   (6) முஸ்லிம்களாகிய நாம் ஆடை அணியும் போது கவனத்தில் கொள்ள வேண்டிய இரு விடயங்களைக் குறிப்பிடுக.
   (7) ஒரு மு.்.மினுடைய வீட்டில் காணப்பட வேண்டிய முக்கியமான பண்பொன்று குறிப்பிடுக.
   (8) அல்லாஹ்வினால் இயற்கையாகத் தரப்பட்ட பொதுச் சொத்துக்கள் இரண்டு தருக.
   (9) "மா ரெக லே" என்பதன் பொருள் என்ன?
   (10) பிற நாடுகளில் இருந்து இஸ்லாத்தில் இணைந்து கொண்ட தனது நாட்டின் பெயரோடு சேர்த்து அழைக்கப்பட்ட நபித்தோழர் ஒருவரின் பெயரைக் குறிப்பிடுக.

   (10 x 2 = 20 புள்ளிகள்)

2. (1) நபி (ஸல்) அவர்கள் நேசித்த இரு நகரங்களையும் குறிப்பிடுக.
   (2) தேசத்தின் நலனுக்காக இந்நாட்டு முஸ்லிம்கள் உழைத்துள்ள சந்தர்ப்பங்கள் மூன்று தருக.
   (3) உமது சூழலில் காணப்படும் பொது சொத்துக்கள் ஐந்தைக் குறிப்பிடுக.

   (2+3+5=10 புள்ளிகள்)

3. (1) ஒரு முஸ்லிம் தனது குடும்பத்தில் உறவினர்களுடன் வாழும் போது பின்பற்ற வேண்டிய நற்பழக்கங்கள் இரண்டு தருக.
   (2) இஸ்லாம் கூறும் அமைதியான இல்லத்தின் பண்புகள் மூன்று தருக.
   (3) ஒரு முஸ்லிமான ஆணினதும் பெண்ணினதும் அவ்ரத்தினைக் குறிப்பிடுக.

   (2+3+5=10 புள்ளிகள்)

4. (1) இஸ்லாமிய வரலாற்றில் முதல் ஷஹீதான பெண்மணி யார்?
   (2) ஒருவர் ஒரு சஹாபா என அழைக்கப்படுவதற்கு காணப்பட வேண்டிய தகுதிகள் மூன்று தருக.
   (3) ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி) ஆகிய இருவர் பற்றியும் ஐந்து விடயங்களைக் குறிப்பிடுக.

   (2+3+5=10 புள்ளிகள்)

5. (1) உம்மஹாதுல் மு.்.மினீன்களில் இறுதியாக வபாத் ஆகியவர் யார்?
   (2) அன்னை ஹப்ஸா (ரழி) அவர்கள் பற்றிய மூன்று விடயங்களைக் குறிப்பிடுக.
   (3) இஸ்லாத்தின் போர் தர்மங்கள் ஐந்து குறிப்பிடுக.

   (2+3+5=10 புள்ளிகள்)

6. (1) மதீனாவில் பல வருடங்கள் போரிட்டுக் கொண்டிருந்த கோத்திரங்கள் இரண்டையும் குறிப்பிடுக.
   (2) மதீனாவில் வாழ்ந்த முன்மாதிரி ஸஹாபாக்கள் சமூகத்தின் பண்புகள் 3 தருக.
   (3) மதீனா மஸ்ஜிதுன் நபவியின் சமூகப் பணிகள் ஐந்து தருக.

   (2+3+5=10 புள்ளிகள்)

7. (1) நபி (ஸல்) அவர்களின் சுன்னாவின் மீதான எமது கடமைகள் இரண்டு தருக.
   (2) வெட்க உணர்வு பற்றி நபி (ஸல்) அவர்கள், ஹதீஸ்களில் குறிப்பிட்டுள்ள மூன்று விடயங்களைத் தருக
   (3) பிறர் பொருட்களை அனுமதியின்றி பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகள் ஐந்து தருக.

   (2+3+5=10 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** - இஸ்லாம்

ISLAM விடைப்பத்திரம் - தரம் - 7

பகுதி – I

1. 1	6. 3	11. பயபக்தியிலும்	16. ✓
2. 2	7. 4	12. ஸலாம்	17. ×
3. 3	8. 1	13. கஸ்தூரி வியாபாரி	18. ✓
4. 4	9. 2	14. அல்குர்ஆன்	19. ×
5. 2	10. 3	15. லைலதுல் கத்ர்	20. ×

(20 x 2 = 40 புள்ளிகள்)

பகுதி – II

(01)

1. பத்ர், உஹத், கந்தக், அஹ்ஸாப் போன்றன...
2. ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி)
3. பிலால் (ரழி)
4. ஸிப்பீன் யுத்தம்
5. நூஹ் (அலை)
6. அவ்ரத் பேணல், அழகாக இருத்தல்.
7. இறைவனை நினைவு கூறல், இறைவசனங்களை ஓதல்/ மார்க்கம் போதிக்கப்படல்.
8. நீர், ஆறு, கடற்கரை, காடுகள் போன்றன...
9. என்னைக் காத்த இரத்தமே
10. ஸல்மான் அல்பாரிஸி, ஸுஹைப் அர்ரூமி, ஹுதைபா அல் யமானி போன்றவர்கள்...

(02)

1. மக்கா, மதீனா
2. சுதந்திரத்திற்காக பாடுபடல், சிங்கள மன்னர்களுடன் இணைந்து நாட்டின் நலனுக்கு சேவை செய்தல், மந்திரி பிரதானிகளாக இருத்தல் போன்றன...
3. வகுப்பறை கட்டடங்கள், மைதானம், ஆய்வு கூடம், பொது மலசலகூடம் போன்றன...

(03)

1. - பொய், பொறாமை, கோள், புறம் போன்ற குடும்ப உறவை பாதிக்கும் மோசமான பண்புகளை விட்டும் தவிர்ந்திருத்தல்.
   - உறவினருடன் சகோதரத்துவத்துடனும் விட்டுக்கொடுப்புடனும் நடந்து கொள்ளல்.
2. - இறைவனை நினைவு கூறும் இடமாக இருக்கும்.
   - பாதுகாப்பும் சுதந்திரமும் வழங்கும் இடமாக இருக்கும்.
   - கல்வியை தூண்டும் இடமாக இருக்கும்.
3. அவ்ரத் (ஆண்) :- தொப்புளுக்கும், முழங்காலுக்கும் இடைப்பட்ட பகுதி மறைக்கப்பட வேண்டும்.
   (பெண்) :-முகம், மணிக்கட்டுகள் வரையிலான இரு கைகள் தவிர்ந்த ஏனைய பகுதிகள் மறைக்கப்பட வேண்டும்.

(04)

1. சுமையா (ரழி)
2. நபி (ஸல்) காலத்தில் வாழ்ந்து அவர்களை நேரடியாகவும் கண்களினால் பார்த்து அவர்களை விசுவாசம் கொண்டு கடைசி வரை முஸ்லிமாக வாழ்ந்து மரணித்தோர்.
3. பொருத்தமான விடைகளுக்கு புள்ளி வழங்கவும்.
   (ஹஸன் (ரழி), ஹுஸைன் (ரழி) பற்றி ஐந்து விடைகள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்)

අ.පො.ස සාමාන්‍ය පෙළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් පත්‍ර/සාහිත්‍ය පත්‍ර Past Papers Wiki සඳහා සම්පූර්ණයෙන්ම නොමිලේ

(05)

1. உம்மு ஸல்மா (ரழி)
2. உமர் (ரழி) யின் மகள் நுபுவத்துக்கு 5 வருடங்களுக்கு முன் பிறந்தார்.
   உமர் (ரழி) யுடன் இணைந்து இஸ்லாத்தை ஏற்றார்.
   ஹிஜ்ரி 2 இல் நபியவர்களால் மணக்கப்பட்டார்.
   எழுத வாசிக்க முடியுமானவர், பெண்களுக்கு கல்வியூட்டியவர்கள், ஹதீஸ்களை அறிவிப்புச் செய்தல்.
   (போன்ற விடைகள்)
3. - அத்துமீறுவோறுடன் மட்டும் யுத்தம் புரிய வேண்டும்.
   - பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் போன்றோரை தாக்க கூடாது.
   - பசுந்தாவரங்கள், கனி தரும் மரங்களை நாசம் செய்ய கூடாது.
   - வழிபாட்டு தளங்களை அழிக்க கூடாது.
   - சித்திரவதை கூடாது.

(06)

1. அவ்ஸ், கஸ்ரஜ்
2. - கோத்திரங்களிடையே சமாதானம் செய்து வைத்தல்.
   - ஜமாஅத் தொழுகை, ஜும்ஆத் தொழுகை
   - நோன்பு, ஸக்காத் கடமைகள் விதியாதல்.
   - சமூக வாழ்க்கைக்குத் தேவையான சட்டங்கள் நடைமுறைக்கு வரல்.
   - குற்றங்களுக்கு தண்டனை விதியாக்கப்படல்.
3. - இஸ்லாமிய சமூகத்தின் மத்திய நிலையம்.
   - ஜமாஅத் தொழுகைகள் நிறைவேற்றப்படல்.
   - பரஸ்பரம் சுக துக்கங்கள் விசாரித்தல்.
   - சமூகத்தில் ஏற்படும் பிணக்குகளை தீர்த்து வைத்தல்.
   - வெளிநாட்டு தூதுவர்களை வரவேற்றல்.
   - வரியோர்கள், அவசரத் தேவையுடையோருக்கு நிவாரணம் வழங்கல்.
   - அறிவைப் பரப்பும் கலா நிலையம்.

(07)

1. மனனமிடல், நடைமுறைப்படுத்தல், போதித்தல்.
2. - வெட்கம் ஈமானின் கிளைகளில் ஒன்று.
   - வெட்கமும் ஈமானும் ஒன்றோடொன்று இணைந்தவை.
   - வெட்கம் எப்போதும் நல்லதையே தரும்.
   - வெட்கம் அழகு சேர்க்கும்.
   - வெட்கமின்மை நரகத்திற்கு இட்டுச் செல்லும்.
3. - அது ஹராமாகும்.
   - நண்பர்/ உறவினர்களிடையே பகையை ஏற்படுத்தும்.
   - கோபம், குழப்பம் ஏற்படல்.
   - நட்பு இழக்கப்படும்.

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank